Registered as a Newspaper பக்கங்கள் 06 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 30 (12.02.94) சனிக்கிழமை ஓசை 359

யாழ்ப்பாணம்

## போக்குவரத்து வசதிஇன்மையால் புற்றுநோயாளர் மரணம்

யாழ். குடாநாட்டிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்ல வேண்டிய புற்றுநோயாளர் அச் சிகிச்சையை பெறமுடியாதநிலையில் மரணம் அடைகின்றதாக புற்றுநோய் வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. சென்ற வருடம் செப்டம்பர் மாதம் முதல் நிறுத்தப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலான குமண சேவையில் இருந்து விலக்கிக்கொண்டதைத் தொடர்ந்து நோயாளரை கொழும்புக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்வது நிறுத்தப்பட்ட நிலையினால் இவ்வாறு அனாவசிய மரணங்கள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டிற்கு புற்றுநோய் சிகிச்சை (6ஆம் பக்கம் பார்க்க)

தென்னிலங்கைக்கு

## இந்து குருமார்கள் நல்லெண்ண விஜயம்

(யாழ்ப்பாணம்)

இந்துமதகுருமார் ஒன்றியத்தின் நல்லெண்ண தூதுக்குழு ஒன்று மிகவிரைவில் தெற்கு நோக்கி நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளது. இந்த நல்லெண்ண விஜயத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தெற்கு நோக்கிச் செல்லும் இந்த நல்லெண்ணத் தூதுக்குழு தென்பகுதியில் பல தரப்பினருடனும்பேச்சுவார்த்தைகளை நடாத்துவார்கள் என்றும் தெரியவருகிறது.

## புலிகள் - அங்கிலிக்கன் ஆயர் நேற்றுப் பேச்சுவார்த்தை

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ திருச்சபைகளின் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

யாழ்ப்பாணம் வந்திருக்கும் இத்திருச்சபைகளின் தூதுக்குழுக்களுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையிலான நல்லெண்ண அடிப்படையிலான இப்பேச்சுவார்த்தைகள் சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றன.

இப்பேச்சுகளின்போது சமாதானம் ஏற்படுவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இத்திருச்சபையின் தூதுக்குழுவினருக்கு விடுதலைப்புலிகள் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இப் பேச்சுவார்த்தைகளில் (6ஆம் பக்கம் பார்க்க)

ஒப்பரேசன் 'தவளை'

## வற்றாப்பளையில் சிறப்புறநடந்தவெற்றிவிழா

(முல்லைத்தீவு)

பூநகரிக் கூட்டுப்படைத்தளம் தகர்ப்பு வெற்றி விழா நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

''ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின் 90ஆம் நாளான நேற்று முன்தினம் வற்றாப்பளை கேப்பாபிலவு என்னுமிடத்தில் இவ்வெற்றி விழா நிகழ்வுகள் நடைபெற்றன. கூட்டுப்படைத்தளத்தின் மாதிரி அமைப்பு ஒன்று அமைக்கப் (6ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம்;

# சமாதான பேச்சுக்களுக்கு அவசிய தேவை

## நல்லெண்ண தூதுக் குழுக்களிடம் விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

"விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயாராகவே உள்ளனர். அரசுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சமாதானத்திற்கான சுமுகமான சூழ்நிலை உருவாக்கப்படுவது அவசியமாகும். இதற்கு போர் நிறுத்தமும், பொருளாதாரத்தடை நீக்கமும் அவசிய தேவையாகும்". இவ்வாறு நேற்று மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இப் பத்திரிகையாளர் சந்தி... காலன், கல்விக்கழகப் பொறு... பத்திரிகையாளர் மத்தியில்... தலைப்புலிகள் முன்னிபந்...

## மல்லாகத்தில் எறிகணை வீச்சு; குழந்தை உட்பட மூவர் காயம்.

(நமது நிருபர்)

பலாலியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலுக்கு மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை10-30 மணியளவில் மல்லாகம் கோட்டைக்காட்டு பகுதியில் உள்ள வீடொன்றின் அருகில் வீழ்... ஹும் ஒன்றரை வயது குழந்தையும் சுன்னாகம் மயிலணியில் இருந்து மேற்படி எறிகணை வீழ்ந்து வெடித்த வீட்டிற்கு வந்திருந்த கதிரிப்பிள்ளை சுதாகரன் (வயது 24) என்பவருமே படுகாயமடைந்தவர்களாவர். இவர்களுள் பேரின்பநாயகி என்பவர் காலிலும் தோள் மூட்டிலும் படுகாயமடைந்துள்ளார். (9,11) (சி)

கல்வி அலுவலகங்களில்

## பொதுமக்கள் தினமாக

இப் பத்திரிகையாளர் சந்திப்பின் போது திரு: அன்ரன் பாலசிங்கத்துடன் விடுதலைப் புலிகள் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன், கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், கல்விக்கழகத்தைச் சேர்ந்த பாலகுமாரன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

பத்திரிகையாளர் மத்தியில் தொடர்ந்து பேசிய திரு அன்ரன் பாலசிங்கம், அரசுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு விடுதலைப்புலிகள் முன்நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை, ஆனால் போர் நிறுத்தத்தை மேற்கொண்டும் பொருளாதாரத் தடையை நீக்கியும், சமாதானத்துக்கான சகஜ நிலையை அரசு உருவாக்க வேண்டும். இவ்வாறான சமாதானத்துக்கான

(6ஆம் பக்கம் பார்க்க)

வீடொன்றின் அருகில் விழுந்து வெடித்த எறிகணைக்கே இம்மூவரும் படுகாயமடைந்தனர்.

மல்லாகம் கோட்டைக்காட்டைச் சேர்ந்த எஸ். பேரின்பநாயகி (வயது 49) அளவெட்டியில் இருந்து இடம்பெயர்ந்து இப் பகுதியில் வசித்து வரும் எம். மதீபன் என்

# புத்திஜீவிகள் இனப் பிரச்சினையை பிரதிபலிக்கத் தவறிவிட்டார்கள்

## –குமார் ரூபசிங்கா

சிறிலங்காவின் அனுபவங்களிலிருந்து பல விடயங்களை அறிந்து கொள்ளலாம். சிறிலங்காவின் புத்திஜீவிகள் எவரும் உண்மையில் இனப்பிரச்சினையைப் பிரதிபலிக்கத் தவறி விட்டார்கள். இது விமர்சனத்துக்குரியது. அவர்கள் அபிவிருத்தியின்மை, அரசியல் பொருளாதாரம் மற்றும் ஏகாதிபத்தியம் குறித்து அதிககவனம் செலுத்துகிறார்கள். இந்தப் பின்புலத்திலிருந்து இனப்பிரச்சினை ஒன்று வெடிக்கும் என்று புத்திஜீவிகள் எவரும் எதிர்பார்க்கவில்லை இவ்வாறு லண்டனை மையமாகக் கொண்டியங்கும் 'இன்டர்நஷெனல் அலேர்ட்,' என்ற சர்வதேச அமைப்பின் பொதுச்செயலர் கலாநிதி

(6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கே உணவு அனுப்புவதற்கு முன்கூட்டியே பணம் செலுத்துக!

## நிதி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(நமது நிருபர்)

குடாநாட்டுக்கான உணவு விநியோகத்தை மேலும் சீரழிக்க சிறிலங்கா அரசாங்கம் முயற்சிக்கின்றது. இதன் ஒரு கட்டமாக நிவாரண மற்றும் இலவசமாக வழங்கப்படும் உணவுப்பொருள்கள் தவிர விற்பனைக்கென கொள்வனவு செய்யப்படும் உணவுப் பொருள்களுக்குமுற்கூட்டியே பணம்செலுத்தவேண்டுமென யாழ் அரசாங்க அதிபருக்கு நிதியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை காலமும் செயலகத்தால் கொழும்பிலிருந்து கொண்டுவரப்படும் உணவுப் பொருள்கள் கடன் அடிப்படையிலேயே கொள்வனவு செய்யப்பட்டு வந்தது இவ

(6ஆம் பக்கம் பார்க்க)

# நெருக்கடியின்போதே மக்களுக்கு உதவுவது அவசியமானதாகும்

## 'யுனிசெப்'பிற்கு யாழ். மாநகரசபை மகஜர்

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசானது கடந்த நான்கு வருடங்களாக யாழ். குடாநாட்டு மக்களுக்கு வழங்கும் உதவிகள் மக்களின் உயிர்களைப் பிடித்து வைத்திருப்பதற்கு மட்டுமே போதுமானது. இதேவேளை குடாநாட்டில் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளும் குறைந்து கொண்டே செல்கின்றன, இந் நிலையில் யாழ். குடாநாட்டுமக்களுக்கு ''யுனிசெப்'' உதவிகளை வழங்க முன்வர வேண்டுமே தவிர மக்கள் நல்ல நிலையில் இருக்கும் போது உதவிகளை வழங்குவதில் பயனில்லை. அத்தகைய உதவிகள் மக்களுக்கு தேவையில்லாதவை என யுனிசெப் நிறுவனத்திற்கு யாழ். மாநகரசபையின் சுகாதார அதிகாரி நேற்று அனுப்பி வைத்த மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளார். சுகாதார அதிகாரி

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஒரே குழுவினருக்கிடையே தீவுப்பகுதியில்துப்பாக்கிசூடு

## ஒருவர் பலி, ஒருவர் காயம்

(கொழும்பு)

ஊர்காவற்றுறையில் ஒரே ஆயுதக் குழுவினருக்கிடையே இடம் பெற்ற மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார்; இன்னொருவர் படுகாயமடைந்தார்.

வாகனத் தடை உத்தரவை மீறிச் சென்ற வாகனம் மீது ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போதே இம் மோதல் இடம் பெற்றதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

அப்துல் சமது என்பவர் கொல்லப்பட்டதாகவும் அன்ரன் ராஜ் என்பவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# றுகுணு புறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருட்களுடன் றுகுணு கப்பல் நேற்றுமாலை கொழும்புத்துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டுள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் அதிகஅளவில் உரமே எடுத்துவரப்படுவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# புதன்கிழமை பிரகடனம்

வடக்கு கிழக்கு - மாகாண சபையினால் புதன் கிழமை பொதுமக்கள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம். ஏ. சி. மொஹைதீன் சகல மாகாண பிரதேச உதவிக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் தெரியப் படுத்தியுள்ளார்.

இதனைச் செயற்படுத்தும் வகையில் சகல கல்வி அலுவலகங்களிலும்கடமையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் தவறாது புதன்கிழமை காரியாலயத்துக்கு சமுகம் கொடுத்து பொதுமக்களுக்கான தமது சேவைகளை வழங்கி அவர்கள் குறைகளைத்தீர்த்து வைக்க வேண்டும். இத்தினத்தில் உத்தியோகத்தர்கள் லீவு எடுப்பதாயின் முன்கூட்டியே அனுமதி பெற வேண்டும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# எழுதுவினைஞராக 14பேர் நிரந்தர நியமனம்

(வடமராட்சி)

மத்திய அரசினால் நடாத்தப்பட்ட எழுதுவினைஞர் போட்டிப்பரீட்சையில் 14 பேருக்கு நிரந்தர நியமனம் கிடைத்துள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப் போட்டிப் பரீட்சைக்கு 69பரீட்சார்த்திகள் தோற்றி இருந்ததாகவும் இதில் 14பே

(6ஆம் பக்கம் பார்க்க)

# வெற்றி குறித்த டி.பியின் சந்தேகமே ஜனாதிபதி முறையை மாற்றும்முயற்சி

## சுதந்திரக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் நடைபெற ஒரு சில மாதம் மட்டும் இருக்கும் போது அரசியல் அமைப்பு திருத்தமொன்றின் மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யும் முறையை மாற்ற அரசாங்கம் முற்படுவது ஜனாதிபதி தேர்தலில் அது வெற்றி பெற முடியாது என்ற சந்தேகத்தின் பெயரிலேயே செய்ய முனைவதாக சுதந்திரக் கட்சி வெளியிட்ட பத்திரிகை அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

சென்ற பதினாறு வருடமாக ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல் முறையில் நம்பிக்கை கொண்டிருந்த இந்த அரசாங்கம் தற்போது இம்முறையைக் கண்டு பயப்படுவது ஏன் என சுதந்திரக்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

பாராளுமன்ற மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறையை சுதந்திரக் கட்சியினர் முற்றாக நிராகரித்துள்ளனர். அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் பத்து மாதங்கள் இருக்கும் போது ஜனாதிபதி டி- பி. விஜேதுங்கா திடீரென ஜனாதி

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. பாதுகாப்புச் சபை பொஸ்னியாபற்றி ஆராய்வு

(சரஜீவோ)

பொஸ்னிய நிலை குறித்து ஆராய ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்றிரவு கூடியது. சேர்பியரின் நெருங்கிய நட்பு நாடான ரஷ்யாவினதும், பொஸ்னியாவினதும்வேண்டுகோளையடுத்தே சபை கூடியது.

நேட்டோ, சேர்பியருக்கு படை வாபசுக்கு கெடு விதித்ததையடுத்து ரஷ்யா இந்தக் கோரிக்கையை விடுத்தது. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரமின்றி வான் தாக்குதல் நடத்தலாம் என ரஷ்யா இணங்கியுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு

கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு, ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (7488)

### தவறிவிட்டது

7.2.94 அன்று மணியம் தோட்டத்துக்கும் துண்டிக்கும் இடையில் அடையாள அட்டை இரண்டு 421652880v 408580237V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7490)

### புவியியல் ஆசிரியர் தேவை

யா/புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கு க. பொ. த. (சா/த) வகுப்பிற்கு புவியியல் கற்பிக்கத் தகுதி வாய்ந்த ஆசிரியர் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் வரவும். அதிபர் யா/புங்குடுதீவு ம.வி. (யூனிவேர்சல் கல்வி நிலையம்), சுந்தர்மடம். (7496)

### தேவை

வீல்செயர் (Wheel Chair) விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் உடனடியாக கீழ்க்காணும் முகவரிக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தொடர்புகட்கு S. ஈஸ்வரன் 124, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (7493)

### முக்கிய அறிவித்தல்

மக்கள் தடுமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு, மக்கள் அபிமானம் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம், ராஜாதியேட்டர் அருகாமை, ஸ்ரீ காந்தா அச்சக வேலியிலேயே இயங்குகின்றது. (7302)

### சிரமதானம் (தொல்புரம்)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பகுதியைச் சேர்ந்த அனைத்து கிராமசேவையாளர் பிரிவுகளிலும் பழுதடைந்த நிலையில் உள்ள உள்வீதிகள் சிரமதான அடிப்படையில் செப்பனிடப்படுகின்றன. இப்பணியினால் பல

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
1945.03.14

மறைவு
1994.01.14

### திரு. கந்தையா செல்வராஜா

ஓ பாசமிகு தந்தையே!
அன்போடும் பாசத்தோடும்
எம்மை வளர்த்து விட்டு
இடைவழியில் சென்று விட்டீர்கள்
வரவைத் தானே எதிர் பார்த்தோம்
துயரம் தானே எமக்கு இங்கே
அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கும்.

மனைவி, மகன், மகள்மார்.

ராஜாஸ்ரோர்ஸ் உரிமையாளர்
கலட்டி, சரவெட்டி. (5871)

---

## 93 ஆவது நினைவு நாள்



பிறப்பு:
27 - 7 - 1977

வீரச்சாவு:
12 - 11 - 1993

### வீரவேங்கை இளையதம்பி
(மாடசாமி இராமச்சந்திரன்)

12-2-94 சனி இன்று ஆன்ம சாந்திக்காக செய்யும் கிரியையிற் பங்கு கொண்டு, மதிய உணவு நிகழ்விலே போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

முகவரி
உசன் இராமநாதன்
ம. வி அருகாமை,

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

---

## 1-ம் நாள் 12.2.94 சனிக்கிழமை

### 'லிங்கம் கூல்பார்' நிறுவனத்தின் ஆதரவில்

மாலை

**4.00-5.00 மங்கள இசை**
கே. ஆர். சுந்தரமூர்த்தி )
கே. செல்வரத்தினம் ) நாதஸ்வரம்
எஸ். ராமதாஸ் )
ஆர். பாஸ்கரன் ) தவில்

**5.00 - 5.40 பாட்டு**
கே. சங்கீதா
கே. தீபா
கே. பவப்ரியா
கே. தர்ஷினி
கே. ஜனனி
| பாட்டு
ரி. ரேணுகா - வயலின்
பி. ரதிரூபன் - மிருதங்கம்

**5.20 - 5.40 பல்லியம்**
செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம் அவர்களின் மாணவர்கள்.

**5.40 - 6.15 பாட்டு**
எ. விக்னேஸ்வரன் - பாட்டு
எஸ். சர்வேஸ்வரசர்மா - வயலின்
எஸ். நாகராஜன் - மிருதங்கம்

**6.15 - 7.00 பாட்டு**
வாசஸ்பதி ரஜீந்திரன் - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்

**7.00 - 7.30 மங்கள விளக்கேற்றல்**
திரு. நா. அப்புலிங்கம் (லிங்கம் கூல்பார்)
திரு. வே. சிவசுப்பிரமணியம், ஆர். மனோகரன்
திரு. ஆர். பஞ்சாட்சரலிங்கம் (கமலேஸ்வரி)
அருளுரை: சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
தலைவர்: பேராசிரியர், அ. சண்முகதாஸ் (தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)
பிரதம விருந்தினர்: சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
திரு. கா. மாணிக்கவாசகர் (அரசாங்க அதிபர்)
திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை (கலைப்பீடாதிபதி)
சிறப்புவிருந்தினர்: திரு. எஸ். கனகரத்தினம் (சட்டத்தரணி)
திரு. எஸ். பேரின்பநாதன் (கொண்டலடி வைரவர் தேவஸ்தான தர்மகர்த்தா)

**7.30 - 8.30 கதாப்பிரசங்கம், பொருள்: "கைத்தலம் நிறைகனி"**
நிகழ்த்துபவர்: அருட்கவி சி. விநாசித்தம்பி
ஆர். எஸ் கேசவமூர்த்தி - வயலின்
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்

**8.30 - 9.30 பரதநாட்டியம்**
ஸ்ரீ சக்தி நடனாலயம் வழங்கும்
''நல்லைக் குறவஞ்சி'' நாட்டிய நாடகம்
தயாரிப்பு, ஞானசக்தி கணேசநாதன்

**வாழ்த்துவோர் - மணியம் ஸ்ரோர்ஸ்**
பலாலி றோட், திருநெல்வேலி.
(சி-8605)

---

உ

---

## தேவை

ஒப்பந்த அடிப்படையில் விறகு தறிப்பதற்கு கூலி ஆட்கள் தேவை
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

* சூழல்பாதுகாப்பு நிறுவனம் மணற்காடு
* சூழல் பாதுகாப்புப்பகுதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தாவடி. (சி-8602)

---

## வீர அஞ்சலிகள்

யாழ். மாவட்டத்தில் கடந்த 8ஆம் திகதி ஏற்பட்ட விபத்தில் வீரச்சாவடைந்த

### வீரவேங்கை சிந்து
(நவரத்தினம் சந்திரகலா)

அளவாவோடை ஏழாலைதெற்கு சுன்னாகம் அவர்கட்கு எமது வீர அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வர்த்தகர் சங்கம்**
சுன்னாகம்.

(சி-8607)

---

## 45-ம் நாள் நினைவலைகள்.,



படையில் செப்பனிடப்படு கின்றன. இப்பணியினால் பல காலம் திருத்தமின்றி காண ப்பட்ட சில வீதிகள் புதுப் பொலிவு பெற்றுள்ளன. (41)

உசன் இராமநாதன்
ம. வி. அருகாமை,
மிருசுவில்.
(7495)

குடும்பத்தினர்.

---

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்
ஒன்றிய நிதிக்காக திருமறைக் கலாமன்றம் வழங்கும்

# "தேனிசை மழை"


நாள்:- 12-02-94
நேரம்: மு.ப 10-00 மணி
பி.ப 3-00 மணி

## இடம்:- கைலாசபதி கலையரங்கம்

பிரவேசம்:- 100/-, 50/-, 20/-

குறிப்பு:- 05-02-94 திகதியிடப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள் செல்லுபடியாகும்
காலை 10.00 மணி நுழைவுச்சீட்டு 3-00 மணிக்கு
அனுமதிக்கப்படமாட்டாது.

விளம்பர அன்பளிப்பு:



எஸ்-எம்-பெர்ஞன்டோ

(7501)

---

தசாகாதி

# கிருகயக்ஞ அழைப்பிதழ்

அன்புடையீர்,

ஸ்ரீமுக வருஷம் தைமாதம் 21-ம் நாள் (3-2-1994) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது தாயார் இராசலட்சுமி அம்மா (சின்னக்குரு அம்மா)



தோற்றம்:
10 - 07 - 1938

மறைவு:
03 - 02 - 1994

## இராசலட்சுமி அம்மா
(சின்னக்குரு அம்மா)

அவர்களின் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்: அனைவரும் வந்து அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போம்.

12-02-1994 சனிக்கிழமை - தசாகம்.
13-02-1994 ஞாயிற்றுக்கிழமை - ஏகோதிஷ்டம் மாசிகம்
14-02-1994 திங்கட்கிழமை - சபிண்டீகரணம்
15-02-1994 செவ்வாய்க்கிழமை - கிருகயக்ஞம்

முக்கிய குறிப்பு:

15-02-1994 செவ்வாய்க்கிழமை சாரதாபீட இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தனிப்பட்ட அழைப்பு இல்லை

குறிப்பு: (11-02-94) வெள்ளிக்கிழமை தசாகாதி அழைப்பிதழ் திகதி தவறுதலாக பிரசுரித்தமைக்கு வருந்துகிறோம்)

சாரதாபீடம்,
துன்னாலை.
(7500)
- குடும்பத்தினர்

---

இத்தாலி தேசத்தில் அகால மரணமடைந்த
செல்வன்

## இராமலிங்கம் விநாயகமூர்த்தி

மலர்வு: 27.12.1959
உதிர்வு: 30.12.1993

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
எமக்காகவே வாழ்ந்து இறைவனடி சேர்ந்த...
அன்பு விநாயகனே எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு நீ எங்கே சென்றாய்?

உன் பிரிவால் வாடும்
தாய், சகோதரர்.

'செல்வவிநாயக இல்லம்'
குப்பிளான்.
(7504)

---

# நினைவு கூருகின்றோம்.
## 1994-02-12

1986-ம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா - பூவரசங்குளம் பகுதியிற் தேநீர்க் கடைக்குள் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1989-ம் ஆண்டு யாழ் - வல்வை பொலிகண்டிப் பகுதியில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட தாய், 2மகள்மார், பேரக்குழந்தை உட்பட 04 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு முல்லைத்தீவில் முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா ராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

லெப். சுரேஸ் (அன்ரனிராசா அன்ரனி லோறன்ஸ் -இலாவத்தை-முல்லைத்தீவு)

கமல்ராஜ் (சமயன் சந்திரசேகரம்-தீர்த்தக்கரை-முல்லைத்தீவு)

1992-ம் ஆண்டு திருகோணமலை - மகிந்தபுரம் பகுதியிற் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1993-ம் ஆண்டு திருமலை - வாள்கட்டு என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியபோது வீரச்சாவெய்திய:

2-ம் லெப். நந்தகோபால் பற்றிக் (ஏகாம்பரம் அமிர்தநாதன்-உப்பாறு, திருமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-8604)

## முக்கிய அறிவித்தல்

அனைத்து வகுப்புத் தொழில் செய்யும் வகுப்புத் தொழிலாளர்கள் அனைவரும் தமது நலம் கருதி 28-02-94 முன்னர் அங்கத்துவ அட்டையைபெற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்;

நிர்வாகம்
**வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர் சங்கம்**
யாழ்ப்பாணம்

(7485)



மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்

## நாற்பதாண்டு மலர் வெளியீட்டு விழாவும் சேவை நலம் பாராட்டு விழாவும்

பாராட்டப்படுவோர்:-

1) திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் ஜே.பி.யு.எம்.
(சங்கப் போஷகர்)

2) திரு.சு. ஸ்ரீபாஸ்கரன் அவர்கள் பி.ஏ.
(சங்கத் தலைவர்)

இடம்:- மல்லாகம் மகாவித்தியாலய மண்டபம்

காலம்:- 13-02-94 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி

தலைவர்:- திரு.இ.கதிர்காமலிங்கம் அவர்கள், ஜே.பி.
(சங்கப் போஷகர்)

பொன்னாடை போர்த்தி கௌரவித்தல், பதக்கங்கள், பரிசில்கள், பொற்கிழி கௌரவப்பட்டங்கள் ஆகியன வழங்கல்;

பல பேரறிஞர்கள் ஆசியுரை, வாழ்த்துரைகள் வழங்குவார்கள்;

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மல்லாகம். மு. அருளையா
11.02.94 (7455) செயலாளர்.



ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## ஒப்பந்த அடிப்படையில் லொறிச் சாரதி, லொறிச் சுத்திகரிப்பாளர் நியமனம்

சங்கத்திற்குச் சொந்தமான விசுசு, அசோக் லெய்டன் ஆகிய லொறிகளை கிளிநொச்சிக்கும், கொழும்பிற்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு சாரதி, லொறிச் சுத்திகரிப்பாளர் தேவை;

1. ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.
2. சங்க எல்லைப்பரப்பில் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. வயதெல்லை: 25 - 45.



## தேவை
## சுகாதார பரிசோதகர்

எமது தயாரிப்பு விற்பனை நிலையங்களில்
**சுகாதாரம்**
பேணப்படுவதை கண்காணித்து நிர்வாக அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கு ஓய்வு பெற்ற சுகாதார பரிசோதகர் உடன் தேவை

14-02-94 காலை 10.00 மணிக்கு நேரில் வரவும்

**சுவையருவி**
மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஓ8600)



❋ குளிர்பானப் பிரியர்களே

## ∴ தாகம் தீர அருந்துங்கள் ∴
## ∴ புத்தூக்கி ∴
## ∴ REFRESHER ∴

குளிர்பானங்கள் தயாரிப்பில் முன்னணி வகிக்கும் புத்தூக்கித் தயாரிப்பாளர்கள் புதுப்பொலிவுடன் பின்வரும் பானங்களை உங்களுக்காகத் தயாரித்து விநியோகிக்கின்றனர்.

அவையாவன:

❋ ஒரேஞ் பார்லி ❋ ஒரேஞ் ஸ்பெசல் ❋ லெமன்
❋ லெமன் ஸ்பெசல் ❋ நெக்ரோ ❋ கிறீம் ❋ கோப் கோலா

அருந்தியதும் இவை அனைத்தும் புத்துணர்வையளிக்கின்றன.
இவை குடாநாட்டின் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகி வருகின்றன.
அது மட்டுமல்ல புத்தூக்கித் தயாரிப்பாளர்களினால் இன்னும் சில வெளிவந்து கொண்டுள்ளன.

அவையாவன:

1) ஜாம் (ஸ்ரொபெரி, அன்னாசிப்பழச்சுவை யூட்டப்பட்டது)
2) நெல்லிரசம் (NELLI CRUSH)
3) ஜபிக்ஸ் கம் (JAF-FIX GUM) (பல்வேறு அளவுகளில்)

எமது தயாரிப்புகளை பின்வரும் விநியோகஸ்தர்களிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்
(குளிர்பான வகைகள் மட்டும்)

1) யாழ்ப்பாணம் நல்லூர் பிரிவு: **இனிமை மென்பான விநியோகஸ்தர்**
(பிரதான விநியோகஸ்தர்)
54,A புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.


## பிரதி லஞ்ச ஆணையாளர் பதவி மாற்றப்படவுள்ளார்

(கொழும்பு)

பதில் பிரதி லஞ்ச ஆணையாளர் ஹெட்டியாராச்சி வேறு பதவிக்கு மாற்றப்படவுள்ளார்; லஞ்ச ஊழலில் சம்பந்தப்பட்ட சில அரசியல்வாதிகளை இவர் கண்டுபிடித்து விசாரணை மேற்கொண்டதைத் தொடர்ந்தே இந்தப் பதவி மாற்றம் என நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன;

இவரின் இடத்துக்கு பொது நம்பிக்கை நிதிய பிரதிப் பணிப்பாளர் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இப் பதவிக்கு நியமனம் நேரடியாக வழங்காமல் விளம்பரப்படுத்தித் தேர்வின் பின் வெற்றிடத்தை நிரப்புவது வழக்கம்;

ஏற்கனவே லஞ்ச ஆணையாளர் நெலும் சமகே திடீர் மாற்றக் கட்டளை பெற்று நீதி அமைச்சுக்கு மாற்றமானார் என்பது குறிப்பிடத்தக்கது. உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட குற்றங்களை தொடர்ந்து விசாரித்து வந்ததே நெலும் சமகேயின் மாற்றத்துக்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலக்கத்தகடுகள் விநியோகம்

(தொல்புரம்)

வலி மேற்கு பிரதேச சபையினால் துவிச்சக்கர வண்டிகளுக்கான 1994ஆம் ஆண்டிக்குரிய இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்படுகின்றன.

சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் காரியாலய நேரத்தில் மேற்படி இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ளலாம் என வலி மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திரு.க. திரவியம் அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

## விசேட படி வழங்கப்படும்

(வடமராட்சி)

கூட்டுறவு ஊழியர்களுக்கான விசேட படி 314 ரூபாவை கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பது பணியாளர்களுக்கு இம் மாதம் முதல் வழங்க உள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண ஆணையாளரின் சுற்று நிருபத்துக்கமைய பணியாளர்களுக்கு இவ் விசேடபடி வழங்கப்படவுள்ளது.

1988ஆம் ஆண்டுக்குப் பின்னர் வேலைக்குச் சேர்ந்த பணியாளருக்கே இப் படி வழங்கப்படும். (யோ)

## சம்பளம் வழங்கப்படவுள்ளது

(தென்மராட்சி)

பளை பிரதேச செயலகத்தில் கடமை புரியும் ஊழியர்கள் சகலருக்கும் இந்த மாதம் முதல் பளை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது இவ் ஊழியர்களுக்கான சம்பளப் பணம் இதற்கு முன்பாக கிளிநொச்சி செயலகத்தினால் வழங்கப்பட்டு வந்தது தெரிந்ததே. இதற்காக சுமார் இரண்டரை இலட்சம்

3. வயதெல்லை: 25 - 45.

4. விண்ணப்ப முடிவு திகதி: 28-2-94

5. அனுப்பவேண்டிய முகவரி: பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், பி. எஸ். சேவிஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

விண்ணப்பங்களை நேரிலோ, பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்

(சி-8579)

## 94-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
1976.06.13

வீரச்சாவு
1993.11.11

**வீரவேங்கை இசைத்தமிழ்**
**(தனபாலசிங்கம் தமிழ்ச்செல்வன்)**

வேங்கையே!
மண்ணின் விடிவிற்காகவே
நீ மரித்தாய்
உன் தியாகம்
நிச்சயம்
இங்கு
வெளிச்சம் பரப்பும்!

மடுக்குளம்,
பூவரசங்குளம், வவுனியா. - குடும்பத்தினர்.
(8603)

54,A புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளைகள்:- **இனிமை மென்பான விநியோகஸ்தர்**
நல்லூர்
(நல்லூர் இந்துவிடுதிக்கு அருகாமையில்)

**இனிமை மென்பான விநியோகஸ்தர்**
மானிப்பாய் வீதி, (பள்ளிவாசலிற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

2) வலிகாமப் பிரிவு விநியோகஸ்தர்:-

**புத்தூக்கி விற்பனை நிலையம்**
நவீன சந்தை, வட்டுக்கோட்டை.

**சிவசிறீ வர்த்தக நிலையம்**
உரும்பராய்.

**பராசக்தி மதுபானச்சாலை**
இணுவில்.

3) வடமராட்சி விநியோகஸ்தர்:-

**புத்தூக்கி மென்பான விநியோகஸ்தர்**
நெல்லியடி, கரவெட்டி.

4) தென்மராட்சி விநியோகஸ்தர்:

**சுவையகம் மென்பான விநியோகஸ்தர்**
பிரதான வீதி, சாவகச்சேரி.

குறிப்பு: 300 மி. லீற்றர் கொக்கோ கோலா, பன்ரா, வெற்றுப் போத்தல், வெற்றுப் பெட்டிகள், ஜாம் வெற்றுப் போத்தல்கள் நியாயமான விலைக்குக் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
பொது முகாமையாளர்
**யாழ்ப்பாணம் பனைதென்னை வள அபிவிருத்தி**
**கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ-து)**
இல. 75/1, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி-8596)

தது தெரிந்ததே. இதற்காக சுமார் இரண்டரை இலட்சம் ரூபா பனை பிரதேச செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. (86)

### மூன்றாமாண்டு நிறைவு
(தொல்புரம்)

சண்டிலிப்பாய் மாகியம்பதி மேஜர் முரளி கல்வி வளர்ச்சிக் கழகத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசு நாளும் இன்று மாலை 6-00 மணியளவில் இரட்டையப்புல வைரவர் கோவில் மைதானத்தில் இடம்பெறவுள்ளதென சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (41)

### தற்கொலை
(தென்மராட்சி)

பனை வேம்பொடுகேணியின் பகுதியில் வசிக்கும் பொன்னையா சின்னத்தம்பி (25 வயது) என்பவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். நீண்ட காலமாக சுகவீனமுற்றிருந்த இவர் தனது வீட்டுக்காணிக்குள் இருந்த மரத்தில் சுருக்கு கயிற்றில் தொங்கி மரணமடைந்துள்ளார் (86)

### அறநெறிப்பாடசாலை இன்று ஆரம்பம்

சங்கானை வெல்லில் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தான வழிபாட்டோர் சபையினால் இன்று பிற்பகல் 3 00 மணியளவில் அறநெறிப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. சபை போஷகர் திரு. பொ. கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி பாடசாலை திறப்பு விழாவினை வலிமேற்கு பிரதேசசபை செயலாளர் திரு. க. இரவியம் மங்களவிளக்கினை ஏற்றி ஆரம்பித்து வைப்பார். சங்கானை பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா அவர்கள் சம்பிரதாய பூர்வமாக பாடசாலையினை திறந்து வைப்பார். (41)

# பசுமைப்புரட்சி தமிழீழத்தின் எழுச்சி

எங்கள் தாயகத்தை
பச்சை நிறமாக்கி பட்டினியிலிருந்து
பாதுகாக்கும் விவசாயிகளே!
நாங்கள்போர்க் கோலம்பூண்டதுபோல்
மக்கள் ஏர்க்கோலம்-
பூண்டாக வேண்டிய புதுப்பணி
காத்துக் கிடக்கின்றது!
உறுதியுடன் நின்று
உற்பத்தியைப் பெருக்குவோம்- இன்று

நெல் அறுவடை முடிந்து -நிலம்
உங்களுக்காகக்-
காத்துக்கிடக்கின்றது.
வயலை உழுது "பயறு, உழுந்து,
கௌபி, எள், நிலக்கடலை" போன்ற
உபஉணவுத் தானியங்களை-
உற்பத்தியாக்குவோம்!
ஒருஅங்குலநிலத்தையும் — தரிசாகவிடாது
தானியக் களஞ்சியமாக்குவோம்-

## உங்களுக்கான சகல விதைகளையும், உடனடியாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வட்டத்தொடர்பகங்களின்

# பசுமை விவசாயசேவை

## நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

### அமைவிடங்கள்:

1. கோப்பாய் – நீர்வேலி சந்தி, நீர்வேலி.
2. சண்டிலிப்பாய் – கட்டுடைச் சந்தி, சண்டிலிப்பாய்.
3. உடுவில் – மானிப்பாய் வீதி, உடுவில்.
4. நல்லூர் – முடமாவடி, நல்லூர்.
5. கோண்டாவில் – இருபாலை வீதி, கோண்டாவில்.
6. சங்கானை – பிரதான வீதி, சங்கானை
7. கரவெட்டி – பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
8. பருத்தித்துறை – மந்திகைச் சந்தி.
9. கைதடி – கண்டி வீதி, கைதடி.
10. சாவகச்சேரி – கண்டி வீதி, சாவகச்சேரி.
11. கொடிகாமம் – கச்சாய் வீதி, கொடிகாமம்.
12. பளை – கண்டி வீதி, பளை.

---

❋ விவசாயத் தேவைக்குரிய உள்ளீடுகளான உரம், கிருமிநாசினி, விவசாய உபகரணங்கள் ஆகியவற்றையும் வழங்க 'பசுமை விவசாயசேவை' காத்திருக்கின்றது

(ஐ.8609)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

நாம் கேட்பதைவிட, நாம் பார்ப்பதில் தான் நமக்கு நம்பிக்கை உண்டாகிறது.
ஹெரோ டோட்டல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## உலகமறியா பேச்சு!

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் அண்மைக்காலப் பேச்சுக்கள் பெரும் பேரினவாதக் கர்ச்சனையாக இருக்கின்றவேளை, இது ஆடு நனைகின்றது என ஒநாய் அழுத கதையாகவும் உள்ளது. இதனை அவரின் சுதந்திரதினப் பேச்சில் இருந்து கம்பளை, உடுநுவரப் பேச்சுக்கள் வரை அவதானிக்க முடிகின்றது.

''வடக்கு-கிழக்கிற்கு ஈழம் தரப்படும் எனக்கூறி தெற்கிலுள்ள தமிழர்களை அங்கு செல்லுமாறு நாம் கேட்டால் என்ன நடக்கும்? உண்பதற்கு அவர்களிடம் என்னதான் இருக்கின்றது? மண்ணைத்தான் அவர்கள் தின்ன வேண்டும். அங்கு வருமானம் தரும் வளங்கள் என்ன? வடக்கு வளங்கள் கொண்ட பூமியல்ல. சகல பொருள்களும் தெற்கில் இருந்தே அனுப்பப்பட வேண்டியுள்ளது. ஒரு நாளைக்குஉணவுப்பொருள்கள் அங்கு அனுப்பப்படாது விட்டால் பட்டினியால் வாடவேண்டிவரும்.

டி. பி. விஜேதுங்காவின் இத்'தார்மீகத்தை' அவரிடம் இருந்து யார் எதிர்பார்த்தார்கள்? இலங்கை ஒரு நாடு அவர்கள் அனைவரும் சிறிலங்கா அரசிற்கு கட்டுப்பட்டவர்கள் என அவர்கள் கூறுவதினாலேயே உணவு அனுப்புமாறும், மருந்துகள் அனுப்புமாறும் கோரப்படுகின்றது. அனுப்பிவைக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் கொழும்பிற்கு உள்ளது. எங்கள் மண்ணை எங்களிடம் ஒப்படைத்த பின்னரும் சிறிலங்காவிடம் உணவு வேண்டும், மருந்து வேண்டும்? என்று தமிழர்கள் கேட்க வேண்டும் எனக் கோருகின்றார்களா?

தமிழர் தாயகம் வரண்டது, வளமற்றது என்ற பேச்சுக்கள் மடத்தனமானது. தமிழீழத்தின் வளம் பட்டியல் இடப்பட்டால் - அவை உயர்ந்தளவில் பயன்படுத்தப்பட்டால்-இவ்வாறானதொரு பேச்சிற்கே இடம் இருக்கப்போவதில்லை. நிலவளமும், கடல்வளமும் நிறையவே தமிழ் மக்களிடம் உள்ளது. மேலதிகமாகவும் உள்ளது. வெளிப்பார்வையில் சிறிலங்காவுடன் ஒப்பிடும் இடத்து தமிழர் தாயகம் ஈரலிப்பு குறைவாக இருப்பினும் சர்வதேச பாகுபாட்டில் தமிழீழம் ஒரு வரண்ட பூமியல்ல, ஈரலிப்பு மிக்க பகுதியே.

இதேவேளை சகாரா மற்றும் மேற்காசியப் பாலைவனங்களில் நாடுகள் பரந்து கிடப்பதும், பனிபடர்ந்த அந்தாட்டிகாவில் - தென்துருவத்தில் - நாடுகள் இடம்

## கிழக்கு பல்கலை. இடம்மாற நிர்வாகம் உடந்தை

### கிழக்கு பல்கலை. மாணவர் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் இடமாற்றப்படுவதற்கு அதன் நிர்வாகமே உடந்தையாக இருப்பதாகவும், நிர்வாகத்தினரின் அசட்டுத்தனமான போக்கினாலேயே இடமாற்றம் நேரக்கூடும் எனவும் கிழக்குப் பல்கலைக்கழக விவசாய மற்றும் விஞ்ஞானபீட மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்கள் விடுத்துள்ள துண்டுப்பிரசுரமொன்றில் மேலும் பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்களின் நடவடிக்கைகள் சிலவற்றிற்கு மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வாக்குவாதத்தால் மாணவர்கள் சிலர் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், மாணவர்களுக்கு நிர்வாகத்தால் விதிக்கப்பட்ட தண்டனை அநீதியானது எனச் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தை நிர்வாகம் மூடியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தீவக பாடசாலை ஆசிரியர் வேதனம் கிடைக்கவில்லை

(குருநகர்)

சிறிலங்கா அரச படையினரின் கட்டுப் பாட்டுக்குள் உள்ள தீவுப் பகுதி பாடசாலை ஆசிரியர்களின் நான்கு மாத வேதனம் இதுவரை வழங்கப்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு மற்றும் ஊர்காவற்றுறை, புங்குடுதீவு பகுதி ஆசிரியர்களுக்கே கடந்த ஒக்டோபர் மாதத்திற்குப் பிற்பாடு வேதனம் கிடைக்கவில்லை.

அதேவேளை பயிலுனர் ஆசிரியர்கள் 40 பேர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மேலதிகப் பயிற்சிகளும் தீவகப் பகுதியில் இன்னமும் வழங்கப்படாத நிலை நீடித்து வருவதாகவும் தெரிய வருகிறது.

வேதனம் வழங்கப்படாததை அடுத்து தீவகப் பகுதி ஆசிரியர்கள் நாளாந்த ஜீவனோபாயத்தை நடத்துவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அறியப்படுகிறது. (21)

## கடல்வள அபிவிருத்திகுழு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடல்வளத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், பொது நிர்வாகத் தொடர்பகமும் மேற்கொண்ட முயற்சியினால் யாழ் மாவட்ட கடல்வள அபிவிருத்திக் குழு என்னும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் இயங்கும் இக்குழுவிற்கு மாவட்ட மீன்பிடி அலுவலர் செயலாளராக இருப்பார் கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களை கிராமிய பிரதேச மட்டங்களில் அமைக்கவும் சங்கங்களின் வளர்ச்சிக்கு ஆரம்ப நிதியைப் பெறவும், கரையோர மீன்பிடியை அனுமதிக்க கோரவும், தொழிலின்றி வாழும் மக்களுள் பெருநிலப் பரப்பில் குடியேற விரும்பும் மக்களை அங்கு அழைத்துச்செல்ல தேவையான நிதிவளங்களை ஆராயவும் யாழ் மாவட்ட மீன்பிடிப் பயிற்சி நிலையம் மூடப்படுவதை தடுப்பது எனவும் இக்குழுதீர்மானம் நிறைவேற்றியுள்ளது

## கடன் அடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்பு

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு கடனடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்புகள் கட்டிக் கொடு

வறுமைக்கோட்டுக்கு உட்பட்டோரும், இடம் பெயர்ந்து முகாம்களில் வசிப்போரும் தமிழீழ பொருண்

## சிரமதானம் மூலம் வீதிகள் திருத்தம்

இவ் வருடத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்கள் அம்மாவட்ட மக்களுடன் இணைந்து ரூபா 25,00,000 பெறுமதியான வேலைகளை சிரமதானம் மூலம் செய்து முடித்துள்ளனர். இச் சிரமதானங்களினால் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள பழுதடைந்து போக்குவரத்துக்கு கடினமாக இருந்த வீதிகள் திருத்தி அமைக்கப்பட்டன.

மாதாந்தம் ஒரு சிரமதானம் என்ற ரீதியிலும், மாவீரர் நாள், கரும்புலிகள் தினம், தியாகி திலீபன் நினைவு நாட்கள் போன்ற விசேட நாட்களிலும் இச்சிரமதானங்கள் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### ஊழியர்களுக்கு மிதிவண்டிகள்

யாழ்ப்பாண அரசாங்கசெயலக ஊழியர்களுக்கு நூறு மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. இந்த மிதிவண்டிகளுக்கான பணம் ஊழியர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

சென்ற வருடம் மிதிவண்டிகளை செயலகத்தின் மூலம் பெற்றவர்கள் சிலர் இந்த வருடமும் மிதிவண்டி பெற முன்வந்திருப்பது தெரியவந்ததையடுத்து ஊழியர்கள் மத்தியில் பலத்த சர்ச்சைகள் தோன்றியுள்ளன.

## சந்தை திறப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுவினர் முல்லைத்தீவு மாவட்டம் முத்தையன் கட்டுப் பகுதியில் சந்தை ஒன்றை திறந்துள்ளனர். இச் சந்தை திறக்கப்பட்டிருப்பதையடுத்து இப்பகுதி விவசாயிகள் தமது விளைபொருள்களை சந்தைப்படுத்துவதற்காக மிகுந்த சிரமத்துடன் புதுக்குடியிருப்பு சந்தைக்கு அல்லது ஒட்டிசுட்டான் சந்தைக்கு பயணம் செய்யும் நிலை மாறியுள்ளது.

## சமய அறிவுப் பரீட்சை

வண்ணைசாந்தையர்மடம் கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகத்தினரால் 40 வருடகாலமாக நடாத்தப்பட்டுவரும் சைவசமய அறிவுப்பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு யாழ் இந்துவில்மத்தியகல்லூரியாழ்

## இ.தொ.கா வங்கிக்கணக்கு தொடர்ந்து இயக்கப்படும்

(கொழும்பு)

இலங்கை வங்கி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சின் வங்கிக் கணக்கைத் தொடர்ந்து இயக்க அனுமதித்துள்ளது. இதனை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

எம். எஸ். செல்லச்சாமி இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டதை அடுத்து காங்கிரஸின் நிர்வாகம் வங்கியை அணுகிய போதே இலங்கை வங்கி கணக்கைதொடர்ந்து இயக்கலாம் என்று கூறியுள்ளது.

இ. தொ. காங்கிரஸ் கா சோலைகளில் கையெழுத்திடும் இருவரில் ஒருவர் பொதுச் செயலாளர். அவர் இடைநிறுத்தப் பட்டதை அடுத்து ஒரு நெருக்கடி நிலை உருவாகியது. இப்போது பொதுச்செயலாளருக்குப் பதிலாக நிதிச்செயலர் காசோலைகளில் ஒப்பமிட வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

எம். எஸ். செல்லச்சாமி தனது இடை நிறுத்தலை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

## மதுவரிப் பரிசோதகர் பதவி விண்ணப்பம் கோரல்

(கொழும்புத்துறை)

கொழும்புமதுவரித்திணைக்கள ஆணையாளரினால் மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 23-02-94 புதன் கிழமை. இதற்கான விண்ணப்பங்கள் மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் யாழ். மதுவரி உதவி ஆணையாளருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பங்கள் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

க. பொ த (சாதாரணம்) பரீட்சையில் இரண்டு தடவைகளில் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியும் தமிழ் கணிதம் மற்றும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இதற்கான வயதெல்லை 23-02-94-ம் திகதி 18 தொடக்கம் 25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல்வேண்டும். உயரம் 5 அடி 5 அங்குலம் மார்பளவு 33 அங்குலமும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

இப்பதவிக்கான விண்ணப்பங்களை உதவி மதுவரி ஆணையாளர்இலக்கம் 665|1 கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (24)

## குளங்கள், கேணிகள் புனரமைக்கப்பட்டது

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு வட்டத்தில் உள்ள பாழடைந்த நிலையில் இருந்த 3 குளங்களும், ஒரு கேணியும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்களால் அப்பகுதி மக்களுடன் இணைந்து புனரமைக்கப்பட்டுள்ளது.

நீரேந்து பிரதேசத்தில் உள்ள இக்குளங்களும் கேணியும் புனரமைக்கப்பட்டமையால் மிகவும் ஆழத்தில் இருந்த அப்பகுதிக் கிணற்று நீர் மட்டம் தற்போது உயர்ந்திருக்கிறது. அத்துடன் கால்நடைகளுக்கும் குடிநீர் இந் நடவடிக்கைகளால் கிடைக்கக்கூடியதாக உள்ளது. இந் நடவடிக்கைகளால் அப்பகுதி மக்கள்பெரும்பயன் அடைந்து வருகிறார்கள்.

## முத்தையன்கட்டு குளம் அவசர காப்பு நடவடிக்கை

முல்லை மாவட்டத்தின் முத்தையன்கட்டு குளம் அண்மையில் பெய்த பெருமழை

உடைப்பெடுத்திருக்குமாயின் ஏறத்தாழ 2500 குடும்பங்கள் தங்கள் வதிவிடங்களை

இதேவேளை சகாரா மற்றும் மேற்காசியப் பாலைவனங்களில் நாடுகள் பரந்து கிடப்பதும், பனிபடர்ந்த அந்தாட்டிக்காவில் - தென்துருவத்தில் - நாடுகள் இடம் பிடிப்பதற்குப் போராடுவதும் டி. பி. விஜேதுங்கா அறியாததாக இருக்கலாம். ஆனால் வளமற்றது மழையற்றது வரண்ட பூமிஎன்பதும் அதனால் மண்ணைத்தான் தின்னவேண்டும், பட்டினியால் கிடந்து மடியவேண்டும் என்பதும் உலகறியாத பேச்சு. மேலும், அவ்வாறு வளமற்ற ஒரு பகுதியை சிறிலங்கா ஏன் வலிந்து கட்டிக்கொண்டு பெரும் பொருள் செலவிலும், உயிரிழப்புடனும் வைத்திருக்க முற்படவேண்டும்? தமிழரிடமே வழங்கிவிடலாமே;

இரண்டாம் உலக மகாயுத்தத்துடன் பலலட்சம் யூதர்கள் உலகின் பலமுனைகளில் இருந்தும் விரட்டப்பட்ட போதும், அவர்கள் தமது தாயகமான பலஸ்தீனத்திற்கு ஓடியபோதும் அங்கு ஒரு அரசை ஸ்தாபித்த போதும்அங்கு என்ன பாலாறும்தேனாறும் ஓடியதா? அல்லது, வளம் கொடுக்கும் வண்டல் வெளிகளில் தானியங்களாக பூத்துக்குலுங்கினவா? அன்றிக் கொட்டிக் கிடந்தனவா? ஆனால்இன்று இஸ்ரேல் என்ற நாடு இல்லையா? அதன் அரசியல் வழிசரியோ? பிழையோ? அந்நாடு இன்று நிமிர்ந்து நிற்கவில்லையா?

மேலும் இன்று உலகநாடுகள் எவை தனது தேவையைத் தாமே பூர்த்தி செய்துள்ளன? உலகின் இராணுவ வல்லாதிக்க சக்தியான அமெரிக்காவால் முடிகிறதா? பொருளாதார வல்லரசான ஜப்பானால்தான் கூட முடிகிறதா? உலக வர்த்தகம் என்பது இல்லாது போனால் எத்தனை நாடுகள் இன்று தமது சுதந்திரத்தைப் பற்றியும், இறைமை பற்றியும் பேசமுடியும்? ஏன் அதிகம் பேசும் டி.பி.யின் அரசால் கூட தாக்குப் பிடிக்க முடியுமா?

வெளிநாட்டுக் கடன் எப்போது வரும்? வெளிநாட்டு உதவி எப்பொழுது கிடைக்கும்? எனக் கையேந்தித் திரிவது ஒருபுறம். வெளிநாட்டு மூலதனம் உல்லாசப் பயணத்துறை என ஒருபுறம் நாட்டையும், மக்களையும் வர்த்தகப்பொருளாகப் பயன்படுத்தும்சிறிலங்கா அரசுத் தலைவர் டி.பி விஜேதுங்கா வனங்களில்லை, தமிழருக்குள ஒருநாடு உருவானால் அவர்கள் மண்ணைத்தான் தின்ன வேண்டி வரும் எனப்பேசுவது அறியாமை தவிர வேறு எதுவுமில்லை;

சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிற்கு தேசிய இனப்பிரச்சினை ஒன்றிற்கு இராணுவ ரீதியான தீர்வு ஒன்று காணப்பட முடியாது என்பதில் இருந்து எதுவுமே அவரது சிந்தனைக்கு எட்டாத தொன்றாகவே உள்ளது. ஆனால் அவருக்கு சிந்தனையில் தெளிவாகப் பதிந்துள்ளது பேரினவாதச் சிந்தனை ஒன்றே. அதன் வெறி அவரை ஒரு நாளும் நல்லதைச் சிந்திக்கவோ, சிறிலங்காவிற்கு நல்லதைச் செய்யவோ விடப் போவதில்லை.

---

வாழும் குடும்பங்களுக்கு கடனடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டமொன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பிரிவினர் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

பட்டோரும், இடம் பெயர்ந்து முகாம்களில் வசிப்போரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினருடன் தொடர்பு கொண்டு மாதாந்த கடன் அடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்புக்களை கட்டிக் கொளள முடியும்;

நாளை ஞயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு யாழ் இணுவில்மத்தியகல்லூரியாழ் வண்ணை நாவலர் மகாவித்தியாலயம் யாழ் இந்துக்கல்லூரி. யாழ் வைத்தீஸ்வராக் கலலூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

---

# ஐ. நா. உதவிப் பணியாளர்கள் பணயக் கைதிகளாக்கப்படுவார்கள்

## சேர்பிய படையினர் எச்சரிக்கை

(சரஜீவோ)

பொஸ்னியத் தலைநகர் சரஜீவோ மீதான முற்றுகையை நீக்காவிடின் விமானத் தாக்குதல் நடத்தப்படும் என்ற நேட்டோ நாடுகளின் எச்சரிக்கைக்கு சேர்பியா பதிலளித்துள்ளது.

விமானத் தாக்குதல் நடத்தப்படுமானால் ஐக்கிய நாடுகள் உதவிப் பணியாளர்கள் பிணையாட்களாக பிடித்து வைக்கப்படுவார்கள் என்று சேர்பிய இராணுவத்தின் துணைத் தளபதி கூறியுள்ளார்.

இதேவேளை பொஸ்னியாவில் கடந்த சனியன்று இடம்பெற்ற குண்டுவீச்சு சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த ஐ. நா படையினர் இணக்கம் தெரிவித்திருப்பதையடுத்து ஜெனிவா சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# திசைதிருப்ப முயற்சி

(சென்னை)

ஆடம்பரமான விழாக்கள் மூலம் மககளின் கவனத்தை திசைதிருப்பும் முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டிருப்பதாக தமிழ் நாடு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது;

தமிழ் நாட்டில் அரசியல், பொருளாதார, பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பும் முயற்சியில் ஆளும் கட்சி முனைப்புடன் ஈடுபட்டிருப்பதாகவும் அக் கட்சி மேலும் கூறியுள்ளது.

# இஸ்ரேலியப் பிரதமர்- பி.எல்.ஓ.தலைவர் உடன்பாடு

மேற்காசிய சமாதான ஒப்பந்தம் அமுல்படுத்தப்படுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்த பந்தோபஸ்து பிரச்சினைகள் குறித்து பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் திரு ஜசீர் அரபாத்தும் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு. சிமொன் பெரஸ்சும் உடன்பாடு கண்டுள்ளனர்.

கெய்ரோவில் நேற்று முன்தினம் எகிப்தின் அதிபர் திரு. கோஸ்னி முபாரக் தலைமை வகித்த ஒரு நிகழ்ச்சியில் மூன்று நாட்கள் நீண்ட விவாதம் நடத்திய இரு தலைவர்களும் 21 பக்க ஆவணமொன்றில் கையொப்பமிட்டனர்;

இந்த உடன்படிக்கை இனி இரு தலைவர்களும் பேச்சு நடத்தி எட்டவிருக்கும் ஒப்பந்தத்திற்குவழிவகுத்துவிட்டதென்று திரு. முபாரக் கூறினார்.

செய்தியாளரிடம் பேசிய ஜசீர் அரபாத், இந்த உடன்படிக்கை ஒரு முக்கிய நடவடிக்கையாகும் என்றார் பெரஸ் தெரிவிக்கையில் சிக்கலான சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். வாஷிங்டனில் அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் தெரிவிக்கையில் மற்றுமொரு முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது என தெரிவித்தார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

# நீதித்துறை செயற்பாட்டில் ஆளும் கட்சி தலையிடுகிறது

(சென்னை)

நீதித்துறையின் சுதந்திரமான செயற்பாடுகளில் தமிழ் நாடு அரசு குறுக்கிட்டு வருவதாகஇந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநிலக் குழு குற்றம் சாட்டியுள்ளது.

அக் குழு சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் குறிப்பிட்டதொரு வழக்கை தம்மால் விசாரிக்க முடியாது என்று கூறுமளவுக்கு ஆளும் கட்சியின் தலையீடு இருநததாகவும் தெரிவித்துள்ளது;

---

முல்லை மாவட்டத்தின் முத்தையன்கட்டு குளம் அண்மையில் பெய்த பெருமழையினால் உடைப்பெடுக்கும் அபாயம் தோன்றியது. உடனடியாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுவினரும், முத்தையன் கட்டைச் சேர்ந்த சுமார் 1000 பொது மக்களும் இணைந்து 3 இலட்சம் ரூபா பெறுமதியான அவசர காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந் நடவடிக்கைகளினால் பாரிய அழிவுகள் தடுத்து நிறுத்தப்பட்டன. குளம் உடைப்பெடுத்திருக்குமாயின் ஏறத்தாழ 2500 குடும்பங்கள் தங்கள் வதிவிடங்களை இழந்து ஏதிலிகளாவதுடன் 7000 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த பயிர்களும் அழிவுற்றிருக்கும். மேலும் 2000 கால்நடைகளும்இறந்து போயிருக்கும். இப் பாரிய அழிவினை மக்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து தடுத்து நிறுத்தியுளளதோடு தொடர்ந்தும் முத்தையன்கட்டு குளத்தை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# யாகப்பர் தேவாலய புனரமைப்பு ஆரம்பம்

(குருநகர்)

கடந்தவருடம் பிற்பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சுத் தாக்குதலால் சேதமடைந்த குருநகர் புனித யாகப்பர் ஆலய புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

ஆலயத்தின் இடிபாடுகளை கட்டுவதற்கு சிமெந்துப் பொருள்கள் கிடைக்காததினால் கூரை வேலைகளைப் பூர்த்தி செய்து ஒடு அல்லது அஸ்பெஸ்றஸ்சீற பொருத்துவதற்கான பூர்வாங்க வேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலயப் புனருத்தாரண வேலைகள் யாழ் திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட் திரு. நீ ம. மரியசேவியர் அடிகள் தலைமையில் கடந்த 8 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. (21)

# உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் மூன்றாம் இடத்திற்கான ஆட்டம் 12-02-94 இன்று பிற்பகல் 3 00மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது;

# கலந்துரையாடல்

''வலிகாமம் மேற்கு வலயத்திலுள்ள விளையாட்டுக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் நடைபெறவுள்ளது இதில் சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த சகல விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

✱ ✱

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து வர்த்தகர் சங்கங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களும் நாளை காலை 10.00 மணிக்கு யாழ்மாவட்ட அரசியல் துறைப் பணிமனையில் முக்கிய கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு கேரப்பட்டுள்ளனர்.

# தென்னாசியாவில் ஐந்தாண்டுக்குள் அணு ஆயுதம் பாவிக்கப்படலாம்

— அமெரிக்க செனட் அதிகாரி

(வாஷிங்டன்)

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் தென்னாசியாவில் அணு ஆயுதம் பாவிக்கப்படும் சாத்தியக்கூறு இருப்பதாக அமெரிக்க செனட்டின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் அணு ஆயுத உற்பத்தித் திறன் தொடர்பாக ஆயுத கட்டுப்பாட்டுக் கழகத்தின் கூட்டத்தில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரும் இவ்வாறு கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அணு ஆயுதங்கள் உட்பட பாரிய அளவில் அழிவுகள் ஏற்படுத்தும் ஆயுதங்களை பிரயோகிப்பதில் இந்தியா அல்லது பாகிஸ்தான் ஆத்திரம் காரணமாக ஈடுபடலாம் எனவும் தெரிவித்தார்.

## நான்கு புதியவகை நெல்லினம் கண்டுபிடிப்பு

### வெள்ளத்திலும், உப்புநீரிலும் தாக்குபிடிக்கும்

(கொழும்பு)

பெரு வெள்ளத்திற்கும், உப்பு நீருக்கும் தாக்குப்பிடிக்கக்கூடிய நான்கு இன நெற்பயிர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பத்தனகொட நெல் ஆராய்ச்சி நிலையம் பி. ஜி-3, பி. ஜி 38, பி. ஜி 407, பி. ஜி 745 ஆகிய ரகங்களை அபிவிருத்தி செய்துள்ளது. பயிற்செய்கை மேற்கொள்ள முடியாது கைவிடப்பட்ட நெல் வயல்களில் செய்கை பண்ணுவதற்கு இந்த இன நெல்வகைகள் மிகவும் பொருத்தமானவை என்று விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

உப்பு நீருக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய புதிய விதை நெல்லை விதைப்பதன் மூலம் நான்கு மாதங்களில் அறுவடைசெய்யமுடியும். குறைந்தளவு உரத்தைப் பயன்படுத்தி பெருமளவு அறுவடையையும் பெற்றுக்கொள்ளலாம். ஓர் ஏக்கர் நெல்வயலில் இருந்து 100 முதல் 110 புசல் நெல்லை பெற்றுக் கொள்ளமுடியும்.

### இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து!



### செல்வன் குலேந்திரன் அன்ரோல் கிறிஸ்சாந்

18, சின்னக்கடை வீதி, குருநகரைச் சேர்ந்த செல்வன் குலேந்திரன் அன்ரோல் கிறிஸ்சாந் இன்று (12-02-94) சனிக்கிழமை இரண்டாவது பிறந்த நாளை வெகு விமரிசையாக தமது இல்லத்தில் கொண்

### பொதுமக்கள்

இது தொடர்பான விபரங்கள் காரியாலயத்தில் உள்ள பிரதம லிகிதரினால் பதிவு செய்யப்பட்டு ஒவ்வொரு மாதமும் 5ஆம் திகதிக்கு முன்பாக இவ் அறிக்கை வடக்கு-கிழக்குமாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இக்கடமையைச் செய்யத்தவறும் பிரதம லிகிதரின் வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்காது விடுமாறும் இச் சுற்றறிக்கை மூலம் அவர் குறிப்பிட்டுள்ளார். (17)

### வற்றாப்பளை

பட்டிருந்தது. இவ் விழாவின் ஆரம்பத்தில் முல்லை மாவட்ட துணைப்படைப் பொறுப்பாளர் திரு. அமுதன் ஈகைச் சுடரினை ஏற்றிவைத்தார். முல்லை மாவட்டத் தளபதி திரு. பவான் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். கூட்டுத்தளம் மாதிரி அமைப்பை முல்லை மாவட்ட மக

### நூற்றாண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சிறீராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிரமம் நடத்தும் சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ உரையின் நூற்றாண்டு விழா நாளை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### நெருக்கடியின்

யால் கையளிக்கப்பட்ட இம் மகஜரை ''நரோமா'' கப்பல் மூலம்பயணம் மேற்கொண்ட 'யாழ். யுனி செப்' இணைப்பாளர் நேற்றைய தினமே எடுத்துச் சென்றார்.

யாழ் மக்களுக்கு ஐக்கிய நாடுகளின் அங்கமாக விளங்கும் உலக சுகாதார நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ''இரண்டாயிரம் ஆண்டில் யாவருக்கும் சுகாதாரம்'' உட்பட மேலும் பல திட்டங்களின் பலனை இவர்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும் எனவும்அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கடந்த ஒக்டோபர் மாதம் யுனிசெப் பிரதிநிதி யாழ் நகருக்கு விஜயம் செய்த போது உறுதியளித்த மக்கள் பாவனைக்கான குடி நீரை விநியோகிப்பதற்கு பௌசர், மலசலகூடங்களின்கழிவுகளை வெளியேற்றுவதற்குபௌசர், யாழ். மாநகரசபைக்கான அம்புலன்ஸ் வண்டி, தாய் சேய் நலன் பேணும் திட்டம் மற்றும் இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் அமைந்த கரையோர மக்களுக்கான நன்நீர்த் திட்டமான 2.2 மில்லியன் திட்டம் ஆகியவற்றை விரைந்து நடைமுறைப்படுத்துமாறும் அதில் கேட்டுள்ளார்.

பலவழிகளில் இன்னல்படும் மக்களுக்கு உதவிகளை வழங்குவதே சால சிறந்தது என்பதே தங்கள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கொள்கை. இதற்கு அமையவே இவ் வேண்டுகோளை தாம் விடுத்திருப்பதாக அவர் இம் மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளார்' (நி)

### யுத்த

சூழல் உருவாக்கப் பட்டால் விடுதலைப்புலிகள் அரசுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்த முடியும்.

இவற்றை அரசு பேச்சுக்களுக்கான நிபந்தனையாகக் கருதக்கூடாது. போர் நிறுத்தமும், பொருளாதாரத்தடை நீக்கமும் 'சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கு அவசியமானவை.

யுத்தம் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்

### நிறைவு விழா

இன்று மாலை 6.00 மணிக்கு யா/ இரட்டையப்புல வைரவர் கோவில் மைதானத்தில் கல்வி வளர்ச்சிக்கழக மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசுநாளும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் விடுதலைப்புலிகள் மகளிரமைப்பு துணைப்பொறுப்பாளர் செல்வி. தமிழவள், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். அதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

### புத்திஜீவிகள்

குமார் ரூபசிங்கா கூறியுள்ளார்.

'மற்றாஸ்ஹிந்து'ப் பத்திரிகைச் செய்தியாளர்தொமஸ் ஏபிரகாமுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தியா போன்ற நாடுகளில் அதிகாரப் பரவலாக்கம் மக்கள் அமைப்புகளைச் சென்றடைவதற்குப் பதிலாக அதிகாரம் அடிப்படைவாதிகள் கையில் சிக்கியுள்ளது. இந்த நிலைமையைப் புரிந்து கொள்ளவும், தம்மைச் சமாளித்துக்கொள்ளவும் அடிப்படைவாதத்துக்குப் பின்னால் புத்திஜீவிகள் ஓடுகிறார்கள். இனப்பிரச்சினை, அடிப்படைவாதம் என்று வரும்போது இதனை நாம் புரிந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### வடக்கே

றறை செயலக புனர்வாழ்வு பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு விநியோகித்த பின்னரே அவற்றுக்கான பணம் செலுத்தப்பட்டு வந்தது. இதேவேளை மண்ணெண்ணெய்க்கான பணம் மட்டும் முன்னரே செலுத்தப்பட்டு வந்ததுதெரிந்ததே.

தற்போது நிதியமைச்சின் செயலாளரினால் அரச அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரியவரும் மேற்படி விடயத்தினால் கொழும்பிலிருந்து உணவுப்பொருள்களை பெறுவது பெரும் சிக்கலான ஒன்றாகவே அமையும். இதற்கு செயலகத்திடம் போதியளவு பணமின்மையும் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்பட்டதனால் அவற்றிடமும் தேவையான பணம் இன்மையும் குறிப்பிடத்தக்கது. (கி, பா)

### வெற்றி

பதியை தெரிவு செய்யும் முறையில் மாற்றம் கொண்டு வருவதன் நோக்கம் ஜனாதிபதி தேர்தலில் தான் வெற்றி பெற முடியாது என்ற சந்தேகத்தின் பெயரில் எடுக்கப்பட்ட முடிவாகும் என சுதந்திரக் கட்சி செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவினால் விடுத்த பத்திரிகை செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களின் நலன்களைப் பேணுவது தொடர்பாக பாரிய பொறுப்புக்கள் உடைய அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையொன்றே அவசியம் என்றும் மக்கள் ஜனாதிபதியை தெரிவு செய்ய வேண்டுமென்று அவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### ஐ நா

இதே சமயம் பொஸ்னியாவில் அமுலுக்குவந்த யுத்த நிறுத்தத்தை சிலமணி நேரத்திலேயே மீறிய சேர்பியர்கள் கடும் பீரங்கித் தாக்குதல் நடத்திவருகின்றனர்.

### எழுதுவினைஞர்

ருக்கு பெப்ரவரி 15 ஆம்திகதி முதல் யாழ் மாவட்டத்தில் நியமனம் கிடைத்ததாகவும் அச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

இத்தெரிவையடுத்து மேலும் 38 பேருக்கு எழுதுவினைஞர் பரீட்சை ஒன்றும் விரைவில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (யோ)

### 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி கனகரத்தினம் ஜெகரூபி

(ஆத்தை)

அன்னையிடம் 4-11-1980 — ஆண்டவனிடம் 24-01-1993

திதி: 12-02-1994

கள்ளமில்லாப் புன்சிரிப்பும்
கபடமில்லா நேர்விழியும்
வஞ்சமில்லா நிறைநெஞ்சும்
வகைபாரா நட்புமென
செல்லமொழி பேசி
நிதம் செருக்கின்றி இருந்தவளே
ஆத்தை உன் பிரிவால்
அமைதி இன்றி வாழ்கின்றோம்.

No 605/1 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தந்தை, தாய் அக்காமார், அண்ணாமார், அத்தான்மார்.

18, சின்னக்கடை வீதி, குருநகரைச் சேர்ந்த செல்வன் குலேந்திரன் அன்ரோல் கிறிஸ்சாந் இன்று (12-02-94) சனிக்கிழமை இரண்டாவது பிறந்த நாளை வெகு விமரிசையாக தமது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

செல்வன் கிறிஸ்சாந்தை அப்பா, அம்மா மற்றும் தொட்டப்பா, தொட்டம்மா, பேத்தியார், மாமன்மார், மாமிமார், பெரியம்மாமார், சுவிஸ் பெரியப்பா குடும்பம், பிரான்ஸ் பெரியப்பா குடும்பம், அண்ணன்மார் பிறைனர், சுந்தர், சுவிஸ் மச்சான் றெஜி குடும்பம், சுவிஸ் மச்சான் கொன்சன், சுவிஸ் மச்சாள் பமிலா குடும்பம், சுவிஸ் மாமா கிறிஸ்பின் குடும்பம், இந்தியா மாமா ஸ்ராளின் குடும்பம், வவுனியா மாமா கொலின், சுவிஸ் மாமா மில்சன், இந்தியா கெனடி மாமா குடும்பம், சுவிஸ் அன்ரி, அங்கிள், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணன்மார் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்க வென வாழ்த்துகின்றனர்.

(சி-8606)

---

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
அபிவிருத்திச் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

**காலம்:** 20. 02. 1994 ஞாயிறு மு. ப. 10. 00 மணி

**இடம்:** யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

**தலைவர்:** திரு. அ. பஞ்சலிங்கம் அதிபர்

பெற்றோர் அனைவரும் சமுகமளிக்குமாறு வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

அ. பஞ்சலிங்கம்
அதிபர்

(சி-8613)

க. பூபாலசிங்கம்
செயலர்

---

## ஆண் தட்டெழுத்தாளர் தேவை

யாழ் நகரில் இருந்து ஒன்றரை மைல் தொலைவில் உள்ள அலுவலகம் ஒன்றிற்கு ஆண் தட்டெழுத்தாளர் தேவை.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

வி. இல - 312,
ஈழநாதம், யாழ்ப்பாணம்

(7507)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 61-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

திரு. பவான் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். கூட்டுத்தளம் மாதிரி அமைப்பை முல்லை மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி மயூரி திறந்து வைத்தார்.

மேற்படி படைத்தளம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த மாவீரர்களது உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது அத்துடன் புகைக்குண்டுகளும் வானில் பறக்க விடப்பட்டன. இவ் விழாவில் அதிகளவு மக்கள் கலந்து கொண்டனர்.

### புலிகள்

ஆயர் கெனத் பெர்னாண்டோ, மெதடிஸ்த திருச்சபைச் செயலாளர் வண. டொனால்ட் முத்தையா, டாக்டர் ஜெயக்குலராஜா, பிதா றியன்சி பெரேரா, பிதா ஜெபநேசன், பிதா ஜெயக்குமார், பிதா. டொனால்ட் கனகரட்ணம் ஆகியோரும், விடுதலைப்புலிகளின் தரப்பில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன், கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. பாலகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### போக்குவரத்து

அளிப்பதற்காக விசேட பயிற்சி பெற்ற டாக்டர் பிள்ளை அவர்கள் இன்னும் இங்கு சமுகம் தரவில்லை என்றும் அவர் தொடர்ந்து காலி வைத்தியசாலையில் பணிபுரிவதாகவும் இவர் வருகை தந்தால் மட்டுமே சிகிச்சைக்கான சில ஆய்வு உபகரணங்களையும், சிகிச்சை உபகரணங்களையும் இங்கு கொண்டுவர முடியும் என்றும் அவ் வட்டாரம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை இவரை இங்கு கொண்டுவருவதற்கு அல்லது வேறொரு வைத்தியரை யாவது இங்கு நியமனம் பெற்றுத் தருமாறு யாழ். பிராந்திய அத்தியட்சகர் பிரிவினர் வற்புறுத்த வேண்டுமென அவ் வைத்திய வட்டாரம் தெரிவித்தது. (நி)

---

நிலையை உருவாக்குவதற்கு அவசியமானவை.

யுத்தம் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மக்கள் சாவையும் அழிவுகளையும் சந்தித்துக் கொண்டிருப்பார்கள் இந்த சூழ்நிலையில் சமாதானப்பேச்சுவார்த்தைகள் நடாத்துவது சாத்தியமில்லை. ஆகவே அரசாங்கம் முதற் கட்டமாக யுத்தத்தை நிறுத்தவேண்டும்.

அரசு போரை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் விடுதலைப்புலிகளும் போரை நிறுத்திக்கொள்வர். அடுத்த கட்டமாக பொருளாதாரத் தடையை நீக்கி ஒரு சகஜ நிலையை அரசு தோற்றுவிக்க வேண்டும்.

இராணுவ, பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சாத்தியமாக இருக்காது அவ்வாறு நடைபெறும்பேச்சுவார்த்தைகள் சுதந்திரமான பேச்சுவார்த்தைகளாகவும் இருக்காது.

மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும் சமாதானத்தில் நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டும். இவ்வாறானசூழல் உருவாகினாலேயே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும்.

இவ்வாறான சமாதானத்துக்கான சகஜ நிலை உருவாக்கப்பட்டால் முதல் கட்டப் பேச்சுவார்த்தைகளை யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பிக்க முடியும் என்றார்.

---

றிடமும் தேவையான பணம் இன்மையும் குறிப்பிடத்தக்கது. (கி, பா)

யாழ்ப்பாணம் வந்திருந்த கிறிஸ்தவ நல்லெண்ணத் தூதுக்குழுக்களிடம் இவற்றை எடுத்து விளக்கியதாகவும் கூறினார்.

மேற்படி நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் தீர்வுத்திட்டம் எதையும் எடுத்துவரவில்லை; நாமும் அவர்களிடம் தீர்வுத் திட்டம் எதையும் சமர்ப்பிக்கவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலேயே நடைபெற முடியும் மேற்படி நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் சமாதானத்துக்கான சகஜநிலையைத் தோற்றுவிப்பதற்கான முயற்சியில் பங்களிப்பு செய்ய முடியும்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் அறிக்கைகள் சமாதானத்துக்குப்பாதகமானதாகவே அமைகின்றன.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக பொருளாதாரத் தடையை அரசு நீக்குமானால் யுத்தக்கைதிகளை விடுவிப்பதற்கும் புலிகள் தயாராக உள்ளனர்.

சமாதானத்துக்கான முயற்சிகளைத் தொடர்ந்தும் பிற்போட்டுக் கொண்டே சென்றால் நாடு பிரிவதற்கான சூழலை உருவாக்குவதற்கு உதவுவதாக அமையும் என்றும் தெரிவித்தார். (க) (நி)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 11.02.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 736

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

21-0922, 26-0767, 28-9259, 28-1110

வடபகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:

27-6741, 26-4792, 26-786, 26-3812, 28-7560, 27-7740, 26-5777, 42-9625, 41 9989, 24-0416 24-5454

---

ஆத்மா சாந்தி பெற (partial) 
அமைதி இன்றி வாழ்கின்றோம்.

No 605/1 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தந்தை, தாய்
அக்காமார்,
அண்ணாமார், அத்தான்மார்.

(7503)

---

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் இராஜா நாகேஸ்வரன்

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய உப-அதிபரும், கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் தேவஸ்தான உப - பரிபாலகரும், செயலாளராகவும் அரும் பணி புரிந்து மறைந்த அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி, ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கிறோம்.

முத்துமாரி அம்மன் ஆலய,
இளைஞர்கள்
கட்டப்பிராய்.

(7508)

---

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கந்தையா
### (இணுவில் மேற்கு)

திரு. ஆறுமுகம் கந்தையா 11-02-1994-ல் சிவபதம் எய்தினார். அன்னார் பரமானந்தவல்லி அம்மன் கோவில் அறங்காவலரும், பூசகரும், சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க, இணுவில் மேற்கு கிளை 13 கிளைக்குழுத் தலைவரும் சமூகத்தொண்டரும்ஆவார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம்-சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், புனிதவதி, விவேகானந்தன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், வைத்திய கலாநிதி குமரகுருநாதன் (மஸ்கெலியா), திருமதி ரேணுகா விவேகானந்தத்தின் அன்பு மாமனாரும், கு. சந்திரகுமார் (யாழ். மருத்துவபீடம் 10-ம் அணி), கு. தனனந்தி (யாழ். மருத்துவபீடம் 11-ம் அணி), கு.செல்வந்தி (விஞ்ஞானபீடம் 2-ம்வருடம்), வி. கௌசிகா வி. நிசா ஹரன், வி. ஹரிகரன் ஆகியோரின் அருமைத் தாத்தாவுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (12-02-94) சனிக்கிழமை முற்பகல்10-30 மணியளவில் அன்னாரின் இல்லம் ''பழமுதிர்ச்சோலை''யில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பு உள்ளங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வைத்திய கலாநிதி எஸ். கே. நாதன்

''பழமுதிர்ச்சோலை'',
கந்தசுவாமி கோவில் றோட்,
இணுவில்.

(7498)